# ஒதுக்கீட்டு தலைப்பு 260 - மாவட்டச் செயலகம் நுவரெலியா
# கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை - 2012 ஆம் ஆண்டு

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பாடுகள்

(i) மாவட்டத்தின் தலைமை நிர்வாக நிலையமாக செயற்படுதல்

(ii) மாவட்டத்தில் சமய மற்றும் கலாசார உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்தல்

(iii). மாவட்டத்தில் நிரந்தரமான அபிவிருத்தியை நோக்கி செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

(iv). அரச கொள்கைகளுக்கு அமைவாக மாவட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை எடுத்தல்

(v). பிரதேச செயலகங்களின் மேற்பார்வை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

(vi). பதவியணிக்கான பயிற்சியும் அபிவிருத்தியும்

(vii). மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்

(viii). வெவ்வேறு அமைச்சு மற்றும் திணைக்களங்களினூடாக மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்

(ix). துப்பாக்கிகள் மற்றும் வெடி பொருட்களுக்கான அனுமதிப்பத்திரத்தை விநியோகித்தல்

(x). பிரதேச செயலகங்களினதும் மாவட்ட செயலகத்தினதும் நிதி முகாமைத்துவ நடவடிக்கைளை மேற்கொள்ளல்.

(xi). சொத்துக்களின் பொறுப்பினையும் கட்டுப்பாட்டினையும் உறுதிப்படுத்துதல்

(xii). தேசிய மட்டத்தில் விழாக்களை ஒழுங்கமைத்தல்

.

## 1.2 மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்

(அ) நுவரெலியா

(ஆ) அம்பகமுவ

(இ) வலப்பனை

(ஈ) கொத்மலே

(உ) ஹங்குரன்கெத்த

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் அல்லது இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு இங்கே (அ) முதல் (ஊ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.6 முதல் 1.14 வரையான பந்திகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

மாவட்ட செயலகத்தினால் 2013 மார்ச் 31 வரையில் கீழே காட்டப்பட்டுள்ள கணக்கு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| தலைப்பு | கணக்கின் பெயர் |
|---|---|
| 260 | ஒதுக்கீட்டுக் கணக்கு |

### (ஆ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளின் பராமரிப்பு

மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 10 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட 04 ஐயவினாக்களுக்கும் 2013 மார்ச் 31 ஆம் திகதி வரையில் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்களுக்குரிய கணக்கிடக்கூடிய கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூபா 27,461,209 ஆக இருந்தது.

### (இ) ஒதுக்கீட்டுக் கணக்கு

#### I. மொத்த நிதி ஏற்பாடும் செலவினங்களும்

மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 419,869,000 தொகையாக இருந்ததுடன், ஆண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 383,751,039 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய சேமிப்புக்கள் ரூபா 36,117,961 ஆக இருந்ததுடன், அது மொத்த தேறிய ஏற்பாட்டில் 8.6 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவினத்தின் தன்மை | 2012 திசெம்பர் 31 இல் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் தேறிய நிதிஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் சேமிப்புக்கள் | சேமிப்புக்கள் தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 285,850,000 | 361,069,000 | 13,140,559 | 3.63 |
| மூலதனம் | 58,800,000 | 58,800,000 | 22,977,402 | 39.07 |
| மொத்தம் | 344,650,000 | 419,869,000 | 36,117,961 | |

## II ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளின் பயன்பாடு

(i) வெவ்வேறு செயற்பாடுகளுக்காக முப்பத்திரண்டு ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களிடமிருந்து கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் ரூபா 1,990,304,372 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 1,550,172,119 அல்லது 78 சதவீமாக இருந்தது.

(ii) பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஓய்வூதியத் திணைக்களம் ஆகியவற்றிலிருந்து கிடைத்த நிதிஏற்பாட்டின் பயன்பாடு பலவீனமான நிலையில் காணப்பட்டன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கிடைத்த நிதிஏற்பாடு | உள்ளவாறான செலவினம் | நிதிஏற்பாட்டின் பயன்பாடு (நூற்றுக்கு) |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா | |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 1,330,389,069 | 939,494,225 | 71 |
| ஓய்வூதியத் திணைக்களம் | 256,732,163 | 226,104,146 | 88 |

(iii) மேற்படி ஏனைய அமைச்சுக்களிலிருந்து கிடைத்த நிதிஏற்பாடு தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் முகாமைத் தீர்மானங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணக்கமின்மை |
|---|---|---|
| **இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| நி.பி 245 (1) | 1,141,723 | 03 சான்றுறுதிப்படுத்தப்படாத கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| **பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை** | | |
| 2012 யூலை 10 ஆம் திகதிய 2/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 05.01.02 ஆம் பந்தி | 699,844 | அம்பகமுவ பிரதேச செயலகத்தினால் திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 7704 நாற்றுக்கள் நலனாளிகளுக்கு வழங்கப்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை. |
| | 113,700 | வலப்பனே பிரதேச செயலகத்திற்குரிய திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் நலனாளிகளுக்கு வழங்கப்பட்ட நாற்றுக்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| **பொது நிர்வாக அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை** | | |
| 2008 யூன் 26 ஆம் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | 170,292 | மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளரினால் 1664 லீற்றர் மேலதிக எரிபொருளுக்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(iii) (i) தனியார் போக்குவரத்து அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த அரச விடுதிக்காக நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களாக ரூபா 110,886 செலவினம் மாவட்ட செயலகத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

(ii) நுவரெலியா மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் பயன்படுத்தப்பட்ட வாகனத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட 690 லீற்றர் மேலதிக எரிபொருள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்தமை நாளாந்த ஓட்டப் பதிவேடுகளைப் பரிசோதித்த போது வெளிப்படுத்தப்பட்டது.

(iii) மாவட்ட செயலகத்தினால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய 06 செலவின விடயங்களுக்குரிய ரூபா 1,253,290 ஆன செலவினமொன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் செலவிடப்பட்டிருந்தது.

(iv) 2006 சனவரி 25 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டிருந்த அரசின் கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 2:8(1) ஆ பந்தியின் பிரகாரம் தொழிநுட்ப தன்மையான இயந்திரங்களைக் கொள்வனவு செய்யும் போது அது தொடர்பாக விசேட அறிவினைக் கொண்டுள்ள ஒருவருடன் கூடிய தொழிநுட்பக் குழுவொன்றின் பரிந்துரை அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணங்காமல் மாவட்ட செயலகத்தினால் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செலவினத் தலைப்பிற்கான நிதிஏற்பாட்டின் கீழ் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 666,400 செலவிடப்பட்டு பழுதுபார்க்கப்பட்ட மின்பிறப்பாக்கியொன்று கொள்வனவு செய்யும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

26001 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளும் உள்ளவாறான பெறுமதிகளும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான வை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறான வை | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 30,000,000 | 24,379,652 | 18,700,000 | 24,391,433 | 110,000,000 | 68,717,870 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 26001 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்குரிய 2012 திசெம்பர் 31 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,958,028 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகளை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ii) 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவருக்குரித்தான ஆகக்கூடிய இடர் கடன் உரித்து ரூபா 250,000 ஆக இருந்த போதும் அந்த எல்லையை மிகைத்து இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 110,000 கடன் வழங்கப்பட்டிருந்தது.

(iii) 03 பிரதேச செயலகங்களுக்குரிய ஓய்வுபெற்ற மூன்று உத்தியோகத்தர்களின் ஓய்வூதிய பணிக்கொடையைச் செலுத்தும் போது நிறுவகத்திற்கு உரித்தாக வேண்டிய ரூபா 20,589 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) 2004 ஒக்தோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளரின் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சுக்கள் / திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கிடையே இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் கணக்குப் பொழிப்புக்கள் மூலம் அல்லது வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் தீர்வுசெய்வதற்கும், தீர்வுசெய்யப்படாத கடன் மீதிகள் இணக்கக்கூற்றுக்களில் காண்பிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஏனைய திணைக்களங்களிலிருந்து இடமாற்றம் பெற்றுவந்த நான்கு உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 65,740 ஆன கடன்மீதி

1 ஆண்டு முதல் 6 ஆண்டுகள் வரையிலும், ஏனைய திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற 31 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 3,740,985 ஆன கடன்மீதி 01 ஆண்டு முதல் 19 ஆண்டுகள் வரையில் கடந்திருந்த போதிலும், அம்மீதிகளை தீர்வுசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) கட்டுநிதிக் கணக்கு**

2012 திசெம்பர் 31 வரையில் மாவட்ட செயலகத்தின் 01 கட்டுநிதிக் கணக்கில் ரூபா 3,376,071 ஆன வரவு மீதியொன்று காணப்பட்டதுன், 2013 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் தீர்க்கப்படாத கட்டுநிதி மீதிகள் ரூபா 2,642,782 ஆக இருந்தது.

**(ஊ) பொது வைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 6003/0/0/36/0 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 146,303,065 ஆக இருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 19,569,636 தொகையான 315 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஹங்குரன்கெத பிரதேச செயலகத்தினால் 2012 ஆம் ஆண்டிற்காக பேணப்பட்டு வந்த பொது வைப்புக் கணக்கில் முன்கொண்டு வரப்பட்ட மீதிகள் பதிவு செய்யப்படாமல் ஆண்டிற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டமையால் காலாவதியான பொது வைப்பு மீதி தொடர்பாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 1.6 நல்லாட்சியும் கணக்களித்தன்மையும்

### 1.6.1 கூட்டுத்திட்டம்

சகல அமைச்சு செயலாளர்கள், மாகாண சபை தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து ஆகக் குறைந்தது எதிர்வரும் 03 ஆண்டுகளுக்காக கூட்டுத்திட்டமொன்று ஆண்டின் ஆரம்பத்தின் போது தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மாவட்ட செயலகத்தினால் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

மேற்படி 1.6.1 இல் குறிப்பிட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டுத்திட்டத்திற்கு இணங்க 2010 மற்றும் அதற்குப் பின்னர் நுவரெலியா மாவட்ட செயலகத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்படி 1.6.1 பந்தியில் குறிப்பிட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 ஆகஸ்ட் 02 ஆம் திகதி வரையில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.4 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

மாவட்ட செயலகத்தினால் சில சொத்துக்கள் முறையற்ற விதத்தில் வெளித் தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சொத்துக்களின் வகை | சொத்துக்களின் எண்ணிக்கை அலகுகளின் எண்ணிக்கை | சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் | பெறுமதி |
|---|---|---|---|---|
| | | | | ரூபா |
| (i). | காணி (ஹெக்டேயார்) | 01 | தொழிற் பயிற்சி அதிகாரசபை | 16,000 |
| (ii). | கட்டிடங்கள் | 03 | மத்திய மாகாண சபை, தொழிற் பயிற்சி அதிகார சபை மற்றும் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை | கண்டுபிடிக்க முடியவில்லை. |

## 1.8 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| I | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் | - | |
| | 03 ஆம் பிரிவு | | அமைச்சரினால் நல்லதண்ணி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசம் அபிவிருத்தி பிரதேசமாக பெயரிடப் பட்டு 1572/1 மற்றும் 2008 ஒக்தோபர் 20 ஆம் திகதிய வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்டி ருக்கையில் அதற்கு முரணாக அப்போதய அம்பகமுவ பிரதேச செயலாளரால் காணிச் செயலகத்தை நடாத்தி 45 அத்துமீறிய குடியிருப்பாளர்களுக்காக 2010 ஒக்தோபர் 14 ஆம் திகதிய அம்கோ/3/2சீ.க.இடம் என்ற கடிதம் மூலம் அவர்கள் குடியிருந்த இடத்திற்கு வருடாந்த மற்றும் நீண்டகால அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான அங்கீகாரத்திற்காக மாகாண காணி ஆணையாளருக்கு தொடர்புபடுத்தப்பட்டு அதற்கு 2010 ஒக்தோபர் 14 ஆம் திகதி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |

## II இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம்

| | | |
|---|---|---|
| நி.பி 115 | 26,654 | வலப்பனை பிரதேச செயலகத்தால் முன்னைய ஆண்டிற்குரிய கொடுப்பனவுகள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் 02 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| நி.பி 206 | 243,990 | வலப்பனை பிரதேச செயலகத்தால் வைப்புக்களை மீளச் செலுத்தும் போது இரண்டு உத்தியோகத்தர்களின் உறுதிப்படுத்தல் இல்லாமல் 05 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| நி.பி 245(1) | 8,326,055 | மாவட்ட செயலகம் மற்றும் மூன்று பிரதேச செயலகங்களுக்குரிய சான்றுறுதிப்படுத்தப்படாத 27 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| நி.பி 571 | 16,031,160 | மாவட்ட செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களுக்குரிய 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 269 பொது வைப்பு மீதிகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நி.பி 752 | 181,200 | அரச திணைக்களங்களுக்கு கிடைக்கப்பெறும் சகல பொருட்களும் உடனடியாக பொருட் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், 02 பிரதேச செயலகங்களுக்குரிய கொள்வனவு செய்யப்பட்ட நாற்றுக்கள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. |
| (III) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| | 2002 பெப்ரவரி 25 ஆம் திகதிய 01/2002 ஆம் இலக்கம் | வலப்பனை பிரதேச செயலகத்திற்குரிய அரசாங்க வாகனங்களில் அரச இலட்சினை மற்றும் பிரதேச செயலகத்தின் பெயர் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. | |
| | 2008 யூன் 26 ஆம் திகதிய 13/2008 ஆம் இலக்கம் | 367,944 | மாவட்ட செயலக செலவினத் தலைப்பிலிருந்து மேலதிக எரிபொருளைப் பெற்றுக் கொண்டமைக்காக மாவட்ட செயலாளரால் அமைச்சு செயலாளரின் முன்அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | 2011 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2011 ஆம் இலக்கம் | | 05 ஆண்டுகளில் ஒரே சேவை நிலையத்தில் சேவை புரிந்துள்ள சகல உத்தியோகத்தர்களையும் ஏனைய சேவை நிலையங்களுக்காக இடமாற்றம் வழங்கப்பட வேண்டிய போதிலும், மாவட்ட செயலகத்தினதும் 04 பிரதேச செயலகங்களுக்குரிய 75 உத்தியோகத்தர்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| IV | அரச சேவை பங்களிப்பு நிதிய சுற்றறிக்கை<br>--------------------------------------------------<br>2003 திசெம்பர் 02 ஆம் திகதிய 01/2003 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளரின் கடிதம் | 51,011 | 2011 மார்ச் மாதத்திலிருந்து மாவட்ட செயலகத்தில் சேவையிலீடுபட்டுள்ள 03 அமைய சாரதிகளுக்காக பங்களிப்புத் தொகை அரச சேவை பங்களிப்பு நிதியத்திற்கு 2013 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (V) | ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை<br>----------------------------------------------------<br>2010 செப்தம்பர் 07 ஆம் திகதிய 08/2010 ஆம் இலக்க சுற்றறிக்கை | | |
| | (i) 2 ஆம் பிரிவு | 205,200 | பயங்கரவாத தாக்குதல் காரணமாக இறந்த திருமணம் முடித்த தரைப்படை உத்தியோகத்தரின் மனைவிக்கு மாதாந்த சம்பளத்தை கொடுப்பனவு செய்யும் போது விதவை மற்றும் அநாதை ஓய்வூதியச் சம்பளம் மற்றும் தங்கியிருப்போரின் கொடுப்பனவு வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவு செலுத்தப்படக் கூடாத போதிலும், அதற்கு முரணாக கொத்மலை பிரதேச செயலகத்தினால் வாழ்க்கைச் செலவினக் கொடுப்பனவினை நான்கு தங்கியிருப்போருக்காக 35 மாதங்களாகவும் வலப்பனை பிரதேச செயலகத்தால் தங்கியிருப்போர் ஒருவருக்காக 11 மாதங்களுக்கும் செலுத்தப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ii) 3 ஆம் பிரிவு | 367,425 | 55 வயது வரை தரைப்படையில் மாதாந்த சம்பளத்தைப் பெற்று தரைப்படை சேவை ஓய்வூதியச் சம்பளம், அங்கவீனர் ஓய்வூதிய சம்பளத்தைப் பெறும் உத்தியோகத்தர் களுக்கு வாழ்க்கைச் செலவினப் படிகள் செலுத்தப்படக் கூடாத போதும் கொத்மலே பிரதேச செயலகத்தினால் அதற்கு முரணாக 04 படை உத்தியோகத்தர்களுக்காக 35 மாதங் களுக்காக வாழ்க்கைச் செலவினப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |

## 1.9 செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் பலவீனங்கள்

### (அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காமல் கைவிடுதல்

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2012 திசெம்பர் 31 வரையில் செலவினம் | செயற்திட்டத்தை கைவிட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| பதவிநலை உத்தியோகத்தர்களுக்கான 03 அரச வீடுகளை நிர்மாணித்தல் | 15,083,249 | 2011.08.17 | 5,556,489 | ஒப்பந்தகாரர் வேலையைப் நிறைவு செய்யாமல் கைவிட்டுச் சென்றமை |
| ஹட்டன் காமினிபுர திரு. ஜயவீர அவர்களின் வீட்டுக்கு அருகில் வடிகால் முறைமையை அமைத்தல் | 300,000 | 2012.09.12 | - | ஒப்பந்தகாரரால் வேலையை நிறைவு செய்வதற்கு அக்கரை செலுத்தாமை |

| | | | | |
|---|---|---|---|---|
| கொட்டாஹெல வீதி அபிவிருத்தி | 100,000 | – | – | திருத்தப்பட்ட முன்மொழிவுக்கு அங்கீகாரம் கிடைத்திருக்க வில்லை. |
| கினிகத்ஹேன வித்தியாலயத்தின் யன்னல்களைத் திருத்தியமைத்தல் | 100,000 | – | – | முன்மொழிவுக்கு 2012.12.31 ஆம் திகதி வரை அங்கீகாரம் கிடைத்திருக்க வில்லை. |
| மொடிங்ஹெம் விஹாரையின் அபிவிருத்தி வேலைகள் | 50,000 | – | – | இப்பெயரில் விஹாரை யொன்று பதிவு செய்யப்பட்டிருக் கவில்லை. |
| கமநெகும. | | | | |
| மாவுஸ்ஸாவத்த சனசமூக மண்டபத்தை நிர்மாணித்தல் | 1,000,000 | – | | செயற்படுத்துவதற்கு காலம் போதியதாக இல்லாமை. |
| நோர்வூட் எல்பொட பகுதி வீதி நிர்மாணம் | 1,000,000 | 2012.09.20 | - | ஒப்பந்த சங்கம் அக்கரை செலுத்தாமை. |
| லெனன்ட் பொரடக் பகுதி வீதி அபிவிருத்தி | 1,000,000 | 2012.07.25 | - | - மேற்படி - |

## (ஆ) செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதில் தாமதம்

அம்பகமுவ பிரதேச செயலகத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் கீழே காட்டப்பட்டுள்ளதாமதம் அவதானிக்கப்பட்டது.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 வரையில் செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| மெடில்ல தம்பரஹேன வீதியை புனர்நிர்மாணம் செய்தல் | 1,000,000 | 2012.08.23 | 2012.12.31 | 788,076 | தொடர்வேலை செயற்திட்டமாக பூர்த்தி செய்வதற்கு அங்கீகாரம் கோரப்பட்டது. |
| காமினிபுர கோயில் வீதி அபிவிருத்தி செய்தல் | 2,000,000 | 2012.09.20 | 2012.12.31 | 1,148,524 | - மேற்படி - |
| மொகாவத்த மேல்பகுதி வீதி அபிவிருத்தி | 1,000,000 | 2012.07.12 | 2012.12.31 | 728,593 | - மேற்படி - |
| குடாகம விஹாரை வீதியின் எஞ்சிய பகுதி அபிவிருத்தி | 1,000,000 | 2012.07.12 | 2012.12.31 | 903,933 | - மேற்படி - |

**(ஆ) மதிப்பீடு தயாரித்தலிலான குறைபாடுகள்**

மாவட்ட செயலகத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 பதவிநிலை விடுதிகளுக்கான மதிப்பீட்டின் விடய இலக்கம் பி 01 இன் கீழ் அத்திவாரத்தை வெட்டுவதற்காக 65.40$m^2$ அளவில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 165.64 $m^2$ அளவில் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விலகல் 100.24$m^2$ ஆக இருந்ததுடன், கொள்வனவு வழிகாட்டி கோவையின் 08.13.04 பந்தியின் பிரகாரம் மதிப்பீடு மற்றும் அளவீட்டுப் பத்திரத்தின் பிரகாரம் 10% விலகல் வரை திணைக்களத் தலைவருக்கு அங்கீகரிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதும், அந்த எல்லையை மிகைத்து செயற்பட்டிருந்த போதும், அந்த ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.10 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

நுவரெலியா மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கீழே காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் முறையற்ற விதத்தில் காணப்பட்டன.

(அ) கொள்வனவு வழிகாட்டி கோவை நடைமுறையிலிருந்து விலகி செயற்பட்டமை

(i) 2012 யூலை 25 ஆம் திகதிய 25 ஆம் இலக்க மேலதிகமாக திருத்தப்பட்ட கொள்வனவுக் கைநூலின் 2.9.1 ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் ரூபா 2,565,090 ஆன கொள்வனவிற்காக கொள்வனவு குழு உறுப்பினர்களுக்கும் தொழிநுட்ப மதிப்பீட்டு உறுப்பினர்களுக்கும் செலுத்த வேண்டிய முறையே ரூபா 19,000 மற்றும் ரூபா 10,800 உமாக மொத்தம் ரூபா 29,800 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2.9.1. பந்தியின் பிரகாரம் கொள்வனவுக்குரிய விடயங்கள் தொடர்பாக இணக்கப்பாடொன்றிற்கு வருவதற்காக நடாத்தப்படுகின்ற கூட்டம் வழமையான வேலை நாட்களில் கடமை நேரத்திற்கு புறம்பாக நடாத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கையில் கடமை நேரத்தில் கொள்வனவுக் குழுவை கூட்டி கொள்வனவு மற்றும் தொழிநுட்ப குழு என்பவற்றிற்காக சமூகமளித்த உத்தியோகத்தர்களுக்கு அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 141,300 படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(iii) 2012 ஆம் ஆண்டின் போது மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் மூலதனச் சொத்துக்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல், மூலதனச் சொத்துக்களை கையேற்றல் போன்ற மூலதன செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 20 ஆவது மேலதிக மூலம் விதிக்கப்பட்டிருந்த அதிகார எல்லைகள் மற்றும் கொள்வனவு நடைமுறைகளிலிருந்து விலகி செயற்படுவதற்காக நிதிப்பிரமாணம் 135 இன் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2011 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதிஏற்பாட்டின் கீழ் கொத்மலை பிரதேச செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 25,415 பெறுமதியான டிஜிடல் கெமராவை பதிவுசெய்யப்பட்ட சங்கமொன்று அல்லாத கொத்மலை ஊடகவியலாளர் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

(v) 2011 ஆம் ஆண்டின் திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் கொத்மலை அதிகாரப் பிரதேசத்தில் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட நாற்றுக்கள் தொடர்பான பரிசோதனையின் போது ரூபா 715,255 பெறுமதியான 7367 வகையான நாற்றுக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(vi) கொத்மலை பிரதேச செயலகத்தினால் திவிநெகும செயற்திட்டத்திற்குரிய மிளகு மற்றும் கோப்பி நாற்றுக்களை பகிர்ந்தளித்தல் அறிக்கைகளை பரிசோதித்த போது ரூபா 35,335 பெறுமதியான 3331 நாற்றுக்கள் பெற்றுக்கொண்டமைக்கான பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.

(vii) பொது நிர்வாக அமைச்சின் நிதிஏற்பாட்டின் கீழ் வலப்பனை பிரதேச செயலகத்தை நிர்மாணிக்கும் நோக்கில் 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 7,940,012 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 5376 சதுர அடி அளவிலான முழுமையான இரண்டு மாடிக் கட்டிடத்தில் வலப்பனை பிரதேச செயலகத்தை தாபிக்காமல் வலப்பனை பிரதேச சபை மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை அலுவலகங்கள் அங்கு தாபிக்கப்பட்டிருந்த போதும், அதற்காக செலவிடப்பட்ட பணத்தை மீள்நிரப்புவதற்கு கட்டிடத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வாடகையொன்று அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) நுவரெலியா பிரதேச செயலகத்தினால் 2012 திசெம்பர் 31 இல் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,705,446 பெறுமதியான 74 காசோலைகள் 2013 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை வைத்திருக்கப்பட்டிருந்தது.

## 1.11 செயற்பாட்டு வினைத்திறனின்மையும் பயன்படுத்தப்படாத சொத்துக்களும்

(i) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதிஏற்பாட்டின் கீழ் 05 பிரதேச செயலகங்களினால் பகிர்ந்தளிக்கும் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,740,088 பெறுமதியான 44 பொருள் உருப்படிகள் 2013 பெப்ரவரி 15 ஆம் திகதி வரை பகிர்ந்தளிக்கப்படாமல் காணப்பட்டன.

(ii) வெவ்வேறு அமைச்சின் கீழ் 2012 ஆம் ஆண்டில் பகிர்ந்தளிப்பதற்காக ஹங்குரன்கெத்த மற்றும் வலப்பனை பிரதேச செயலகங்களினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 155,325 பெறுமதியான 514 இருப்பு உருப்படிகள் 2013 பெப்ரவரி 12 ஆம் திகதி வரை பகிர்ந்தளிக்கப்படாமல் காணப்பட்டன.

## 1.12 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

(i) கொத்மலை பிரதேச செயலகத்தினால் 2011 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதிஏற்பாட்டின் கீழ் மெத்தகும்புறுவத்த நூலகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 145,000 பெறுமதியான நிழற்பட பிரதி இயந்திரம் அந்த இயந்திரத்தை வைக்கும் மேசை, பெக்ஸ் இயந்திரம் என்பன 2012 செப்தம்பர் மாதத்தில் மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது குறித்த நூலகத்திற்கு வழங்கப்படாமல் இருந்தமையும் அதற்குப் பதிலாக நூலகத்திற்கு அண்மையிலுள்ள ஏனைய சங்கத்தின் காரியாலயமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தமையும் இப்பொருட்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டன.

(ii) கொத்மலை பிரதேச செயலகத்தினால் 2011 ஆம் ஆண்டின் கமநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் டன்சினன்வத்த வைத்தியசாலை மற்றும் மெத்தகும்புற தெற்கு வைத்தியசாலை என்பவற்றின் தாய் சேய் சிகிச்சை நிலையங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 262,975 பெறுமதியான 02 தொலைக்காட்சிப் பெட்டிகள் 2 டி.வீ.டி இயந்திரங்கள் என்பன 2012 செப்தம்பர் 19 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பெட்டியின் உள்ளேயே இருந்தமை அவதானிக்கப்பட்டன.

(iii) வலப்பனை பிரதேச செயலகத்தினால் 56-6245 மற்றும் 32-4537 ஆம் இலக்க 2 வாகனங்கள் திருத்தியமைக்கப்படாமல் வருடக் கணக்காக அலுவலக வளவில் காணப்பட்டன.

(iv) நில்தண்டாஹின்ன கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள வலப்பனை பிரதேச செயலகத்திற்குரிய சுற்றுலா விடுதி 05 ஆண்டு காலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் பயன்பாடற்றுக் காணப்பட்டது.

## 1.13 நட்டங்களும் சேதங்களும்

(i) வலப்பனை பிரதேச செயலகத்திற்குரிய 2011 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதிஏற்பாட்டின் கீழ் வலப்பனை சாசன பாதுகாப்பு சபைக்கு வழங்கும் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 533,500 பெறுமதியான ஒலிபெருக்கி முறைமையொன்றும் வீடியோ கமராவொன்றும் 2012 ஆகஸ்ட் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது ரஜமஹா விஹாரையில் இல்லாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(ii) வலப்பனை பிரதேச செயலகத்தினால் 2011 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதிஏற்பாட்டின் கீழ் தோரதன்ன பிரதேச விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 174,400 பெறுமதியான 147 மண்வெட்டிகள் அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சரின் இணைப்புச் செயலாளரிடம் வழங்கப்பட்டிருந்ததுடன், குறித்த பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட மைக்காக நலனாளிகளின் கையொப்ப பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) வலப்பனை பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள நூலகங்களுக்காக வழங்கும் பொருட்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 192,150 பெறுமதியான 16 உருக்கு அலுமாரிகள் பிரதேச சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த அலுமாரிகள் நூலகங்களுக்கு வழங்கப்படாதிருந்தமை 2012 ஆகஸ்ட் 23 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

## 1.14 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தினதும் 05 பிரதேச செயலகங்களினதும் பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு காணப்பட்டன.

| ஊழியர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 32 | 23 | 09 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 13 | 13 | - | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 766 | 607 | 159 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 77 | 66 | 11 | - |
| (v) | ஏனைய(அமைய/ தற்காலிக / ஒப்பந்த அடிப்படையில்) | - | 09 | - | 09 |
| | மொத்தம் | 888 | 718 | 179 | 09 |